<u>சுருக்கம்</u>

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் – மூன்றாம் கட்டமாக 30,00,000 (முப்பது இலட்சம்) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்து வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## தகவல் தொழில் நுட்பவியல் (மிஆ–2) துறை

அரசாணை (1 டி) எண்.37 நாள்: 24–7–2007

<u>படிக்கப்பட்டது:</u>

1) அரசாணை (நிலை) எண்.3, தகவல் தொழில் நுட்பவியல் துறை , நாள் 20.6.2006
2) அரசாணை (வாலாயம்) எண்.62, தகவல் தொழில் நுட்பவியல் துறை, நாள் 22.6.2006.
3) அரசாணை (1டி) எண். 22, தகவல் தொழில் நுட்பவியல் துறை, நாள் 30.6.2006
4) அரசாணை (1டி) எண். 34, தகவல் தொழில் நுட்பவியல் துறை, நாள் 3.10.2006.
5) சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் எட்டாவது கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் நாள் 3–7–2007.

***

<u>ஆணை :</u>

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் மகளிருக்கு பொழுது போக்கிற்காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும் வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, அவை இல்லாத குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. மேலே படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் பயனாளிகளின் தெரிவுக்கான நெறிமுறைகள், தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்தல், விநியோகம் மற்றும் திட்ட அமலாக்கம் ஆகியவற்றை பரிசீலித்து ஆலோசனைகள் வழங்க சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே படிக்கப்பட்ட அரசாணை மூன்றில் முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்து 15–9–2006 முதல் அனைத்து சமத்துவபுரங்களில் வாழும் குடும்பங்கள், நீலகிரி மாவட்டத்தில் மலைவாழ் பழங்குடியினர், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும், தென்சென்னையில் ஒன்றுமாக குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளில் உள்ள குடும்பங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கு வழங்கப்படும் என ஆணைகள் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. மேலே பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி இரண்டாம் கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்டுவருகிறது.

5. இத்திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றும் வகையில், அடுத்த கட்ட கொள்முதல் மேற்கொள்வது தொடர்பாக சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு 3–7–2007 அன்று (எட்டாவது கூட்டம்) கூடி விவாதித்து மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் (14") வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரி

. . . 2

கொள்முதல் செய்யலாமெனத் தீர்மானித்து பரிந்துரைத்துள்ளது. இதனை அரசு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது.

அ) மூன்றாம் கட்டமாக 30,00,000 (முப்பது இலட்சம்) (14") வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி எல்காட் நிறுவனம் மூலம் வெளிப்படையான ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தின்கீழ் (Tender Transparency Act) கொள்முதல் செய்யப்படும்.

ஆ) ஒப்பந்தப் புள்ளிகள் 2007 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டு சட்ட மன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் முன் வைத்து முடிவு செய்யப்படும்.

இ) 2006–2007ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில் நுட்பக் குறியீடுகளே (Technical Specifications) இந்தக் கொள்முதலுக்கும் பின்பற்றப்படும்.

6) இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அத்துறையின் அ.சா.கு.எண்.46951/Ind/07, நாள் 20.7.2007-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. சந்திரமௌலி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம், சென்னை–35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
வணிக வரி மற்றும் பதிவுத் துறை, சென்னை–9.
வருவாய்த் துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, சென்னை–9
சிறப்பு ஆணையர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை –5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை–5
மாநில கணக்காயர், சென்னை–18 ( 3 நகல்கள்).
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை –35.
சம்பள கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
**நகல்:**
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை–9.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (தொழில்/வரவு செலவு பொது I & II) துறை, சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர், சென்னை–9.
நிதித்துறை செயலாளரின் தனிச்செயலாளர்,சென்னை–9.
தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர், சென்னை–9.
பிரிவு அலுவலர், தொழில் (பட்டியல்) துறை , சென்னை–9
இ.கோ/உ.ந

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.